# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக்கூட்டம்

**2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

பொருள்–1

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டம் நாள்.01.09.2020 ல் செங்கல்பட்டு நகரத்தினை தலைமையிடமாக கொண்டு செங்கல்பட்டு மாவட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நகரம் 6.09 சதுர கீலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிறிய நகரமாக உள்ளதால் அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்த போதிய இடம் இல்லாததால் இந்நகரத்தினை ஒட்டி அமைந்துள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சிகளை செங்கல்பட்டு நகரத்துடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய கருத்துரு வழங்கதெரிவித்துள்ளார். எனவே இந்நகரத்தினை ஒட்டி அமைந்துள்ள காட்டாங்கொளத்தூர் மற்றும் திருக்கழுகுன்றம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஊராட்சிகள்.

1. சிங்கபெருமாள் கோயில் பஞ்சாத்து
2. அஞ்சூர் பஞ்சாயத்து
3. குண்ணவாக்கம் பஞ்சாயத்து
4. வீராபுரம் பஞ்சாயத்து
5. தென்மேல்பாக்கம் பஞ்சாயத்து
6. புலிப்பாக்கம் பஞ்சாயத்து
7. திம்மாவரம் பஞ்சாயத்து
8. பழவேலி பஞ்சாயத்து
9. ஆலப்பாக்கம் பஞ்சாயத்து
10. மேலமையூர் பஞ்சாயத்து
11. வல்லம் பஞ்சாயத்து
12. திருமணி பஞ்சாயத்து
13 .ஒழலூர் பஞ்சாயத்து
14. பட்ரவாக்கம் பஞ்சாயத்து

பஞ்சாயத்துகளை இணைத்து இந்நகர எல்லையை விரிவாக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.8717/2007/எப்1**

தீர்மானன எண்.1118 நாள்.01.09.2020
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்–2</u>**

தமிழ்நாட்டில் கொரோனா தொற்று அதிகமாக பரவி வரும் நிலையில், மாவட்ட அளவில் செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாவது இடமாக இருப்பதால், பொது மக்கள் நலன் கருதி போர்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற் கொள்ள, தலைமை செயலாளர் அவர்களால் 12.08.2020 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தின் அறிவுரையின் பேரிலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் 17.08.2020 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் கொரோனா பாதித்த வீடுகளில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஆதரவு நண்பர்கள் (Focus Volunteers) 40 நபர்களை பயன்படுத்திக் கொள்ளவும், அறிவுரை வழங்கியதின் படியும் 19.08.2020 அன்று கண்காணிப்பு கூட்டத்தில் இது பற்றி முடிவெடுத்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற் கொள்ள 40 ஆதரவு நண்பர்கள் (Focus Volunteers) கொரோனா பாதித்த நபர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் தேவையான உதவிகள் செய்திட பணியில் அமர்த்தப்பட்டது.

இவர்களுக்கு நாள் 1க்கு ரூ.500/– வீதம் ஊக்கத் தொகை வழங்கவும், இச்செலவினத்தை தற்போது நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், இவ்வாறு செலவிடப்படும் தொகையினை அரசிடமிருந்து நிதி பெற்று தருவதாகவும் மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1119 நாள்.01.09.2020
அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

பொருள்–1

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் இப்பணிக்கு பயன்படுத்த வேண்டி திரு.K.ராஜ கோபால் ஒப்பந்ததாரருக்கு ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி உத்திரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 70 DBC பணியாளர்களுக்கு 2 மாதத்திற்கு 11.09.2020 முதல் 10.11.2020 முடிய உள்ள காலங்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஆகியவை கணக்கிட்டு கீழ்கண்டவாறு பணிக்கப்படுகிறது.

அ.கு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.491/2020/எச்1

தீர்மானன எண்.1120 நாள்.30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வருடா வருடம் தசரா பண்டிகை நடைபெறுவதையொட்டி 10 நாட்களுக்கு விளையாட்டு சாதனங்கள் சிறு மற்றும் பெரு இராட்டினங்கள் வணிக கடைகளில் கட்டண தொகை வசூலிப்பதற்க்கானகுத்தகை உரிமம்

ஆண்டு தோறும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவும் குத்தகைதாரர்க்கு குத்தகை தொகை அடிப்படையில் உரிமம் வழங்கப்பட்டு அதற்க்கான குத்தகை தொகை இந்நகராட்சியில் செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது 2020 ஆம் ஆண்டு (Covid 19) கொரோனா நோய் தொற்று பரவும் காரணமாக பொது இடங்களில் பொதுமக்கள் எந்தவொரு நிகழ்ச்சியிலும் கூட்டமாக பங்கேற்க கூடாது என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதன் காரணமாக எந்தவொரு பொது நிகழ்ச்சியும், சமயம் சார்ந்த நிகழ்ச்சியும் நடைபெறுவதில்லை எனவே இதன் காரணமாக மேற்படி தசரா பண்டிகை நடத்துவதற்கு சூழ்நிலை இல்லாத காரணத்தால் இவ்வாண்டு இப்பண்டிகைக்கான குத்தகை தொகை வசூலிப்பதற்கான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இவ்வாண்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.4210/2011/அ2

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1121 நாள்.30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்ட மூன்று நபர்கள் வாகன முன்பணம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

1. M.பிரியா (பதிவறை எழுத்தர்)
2. M.ஆறுமுகம் (அலுவலக உதவியாளர்)
3. G.சிங்காரம் (இளநிலை உதவியாளர்)

அலுவலக விதிமுறையின் படி வாகன முன்பணம் ரூ.50,000/– வீதம் மூன்று நபர்களுக்கு தனி தனியாக வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. நிர்வாக அவசர அவசியம் முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

தீர்மானன எண்.1122 நாள். 30.09.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் பொது நிதியின் கீழ் பணிகளுக்கு 31.03.2020 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி திர்மான எண்.117 கிடைக்கப்பட்டதை தொடர்ந்து 16.09.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளளத நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டு விலை விகிதத்திற்க்கு) |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி தூக்குமரக்குட்டை உரக்கிடங்கில் கேமரா பொருத்தும் பணி | ரூ.1.50 இலட்சம் | கே.வெங்கடேசலு | 0.01% குறைவு |
| | | | இ.சந்திரன் | 0.23% அதிகம் |

அ.கு–

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்ததாரரின் கொடுத்துள்ள ஒப்பந்புள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1123 நாள். 30.09.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் பொது நிதியின் கீழ் பணிகளுக்கு 31.03.2020 அன்று நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி தீர்மான எண்.1115 மற்றும் 1116 கிடைக்கப்பட்டதை தொடர்ந்து 09.09.2020 அன்று ஒப்பந்தபுள்ளி

கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளளத நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டு விலை விகிதத்திற்க்கு) |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி மழை காலங்களில் மரம் அறுக்கும் இயந்திரம், மணல் மூட்டைகள் மற்றும் இதர பணிகள் தனியார் மூலம் சப்ளை செய்யும் பணி | ரூ.4.00 இலட்சம் | கே.வெங்கடேசலு | 0.05% குறைவு |
| | | | இ.சந்திரன் | 4.77% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சியில் பருவ மழை காலத்தில் மழைநீர் கால்வாய் அமைப்பு மற்றும் மண் கால்வாய் சீர் செய்ய மண்வாரி இயந்திரம் (JCB) மற்றும் லாரிகள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணி | ரூ.3.00 இலட்சம் | கே.வெங்கடேசலு | 0.05% குறைவு |
| | | | இ.சந்திரன் | 2.11% அதிகம் |

அ.கு–

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்ததாரரின் கொடுத்துள்ள ஒப்பந்புள்ளிகளின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1124 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு எண்.7 கைலாசநாதர் கோயில் தெரு, வார்டு எண்.32 அழகேசன் நகர், வார்டு எண்.30 பழைய GST ரோடு மற்றும் தொடர்ச்சி குறிஞ்சி தெரு, வார்டு எண்.33 அண்ணா நகர் 6வது தெரு மற்றும் 10வது குறுக்கு தெரு ஆகிய இடங்களில் தமிழ்நாடு நகர்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2020–21 கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டு பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் 9025/2019/இ3, நாள்.17.07.2020 நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து நகர மன்ற தீர்மான எண்.1094 நாள்.15.07.2020 ல் தொழில் நுட்ப

அனுமதி தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 23.07.2020 பெறப்பட்டு 14.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியின் விவரம் பின் வருமாறு

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கைலாசநாதர் கோயில் தெரு, வார்டு எண்.32 அழகேசன் நகர், வார்டு எண்.30 பழைய GST ரோடு மற்றும் தொடர்ச்சி குறிஞ்சி தெரு, வார்டு எண்.33 அண்ணா நகர் 6வது தெரு மற்றும் 10வது குறுக்கு தெரு ஆகிய இடங்களில் 2020–21 கீழ் தமிழ்நாடு நகர்புற சாலை அமைக்கும் பணி. | ரூ.200.00 இலட்சம் | திரு.G.ராஜேஷ் ஒப்பந்ததாரர் |
| | | | திரு.E.சந்திரன் ஒப்பந்ததாரர் |

மேலும் இப்பணிக்கு Online–ல் ஒப்பந்தபுள்ளிகள் ஏதுவும் பெறபடவில்லை, எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் 14.08.2020 அன்று தொழில் நுட்ப அனுமதி சரிபார்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் தொழில் நுட்ப தகுதி இருப்பதால் அதன் Finacial bid 25.08.2020 அன்று அன்று திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கைலாசநாதர் கோயில் தெரு, வார்டு எண்.32 அழகேசன் நகர், வார்டு எண்.30 பழைய GST ரோடு மற்றும் தொடர்ச்சி குறிஞ்சி தெரு, வார்டு எண்.33 அண்ணா நகர் 6வது தெரு மற்றும் 10வது குறுக்கு தெரு ஆகிய இடங்களில் 2020–21 கீழ் தமிழ்நாடு நகர்புற சாலை அமைக்கும் பணி. | ரூ.200.00 இலட்சம் | திரு.G.ராஜேஷ் 0.01% ம.வி குறைவு |
| | | | திரு.E.சந்திரன் 0.01% ம.வி அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக கொடுத்துள்ள திரு.G.ராஜேஷ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்றிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானன எண்.1125 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–7

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 1 முதல் 6 வரையுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை நகராட்சி பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, நகராட்சி பணியாளர் மேற்கொண்டு வரும் பகுதிகளில் மின் உதிரிப்பொருட்கள் இருப்பில் குறைவாக உள்ளதால். மேற்படி, மின் உதிரிப்பொருட்கள் தேவையான 2020–2021 ஒரு ஆண்டின் 6 மாத காலத்திற்கு தேவையான மின் உதிரிப்பொருட்கள் வாங்கி உபயோகிக்க வேண்டி இப்பணியின் அவசர அவசியம் கருதி தோராய செலவின ரூ.1.46/– இலட்சத்திற்கு ம அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2952/2017/இ2, நாள்.11.09.2020

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம் மேற்படி பணிக்கான TUCS நிறுவனத்தினரிடம் வாங்கவும் பொது நிதியிலிருந்து செலவு செய்து பணி மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1126 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

இந்நகராட்சியில் இயங்கி வரும் அனைத்து கணிப்பொறிகளுக்குண்டான UPS தடையில்லா மின்சாரத்திற்க்கு தேவையான Battery –கள் தற்போது காலம் கடந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது அவசர அவசியத்தை கருதி UPS-க்கு தேவையான 16 (பதினாறு மட்டும்) Drycell Battery வாங்கி பொருத்தி கொள்ளவும், மேலும் பொது சுகாதார துறையில் இயங்கி வரும் கணிபொறிகளுக்கு தனியாக 5 (ஐந்து) 1 KVA UPS வாங்கி பொருத்தி கொள்ள இதற்கான உத்தேச தொகை ரூ.2,50,000/- மன்ற பொருன் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1127 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–9

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 80 HP மோட்டார்களின் பழுதினை சரி செய்ததின் அடிப்படையில் பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தோராய செலவினம் ரூ.1.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0569/இ2/2020

தீர்மானன எண்.1128 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–10

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 80 HP மோட்டாரின் ஸ்டார்டர் ATS புதிய ஸ்டார்டர் அமைத்ததன் அடிப்படையில் பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தோராய செலவினம் ரூ.4.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0568/இ2/2020

தீர்மானன எண்.1129 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–11

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் கோவை அவர்களின் கடிதம் 648/2019/A2 நாள்.27.11.2019 உத்தரவின் படி இந்நகராட்சி மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய

2018–19 மற்றும் 2019–20 ஆண்டிற்கான பங்களிப்பு தொகை ரூ.1,00,000/– ஐ செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொள்ள அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1670/2011/சி1

தீர்மானன எண்.1130 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–12

செங்கல்பட்டு நகராட்சி – பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவின் பேரில் போர்கால அடிப்படையில் நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கீழ் கண்டுள்ள படிவங்கள் உடனடியாக தேவைப்படுவதால் அதனை அரசு பதிவு பெற்ற உள்ளூர் அச்சகத்திலிருந்து நகல் எடுத்து பயன்படுத்தப்பட்டமைக்கு உண்டான தொகை 26,000/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. நகல் எடுக்கப்பட்ட படிவங்கள் மற்றும் எண்ணிக்கைகள்

1. KMR specimen Referal for Covid-19 (SARS-COV2) - 3000 Nos
2. டெங்கு காய்ச்சல் மஸ்தூர்கள் தினசரி பணி அளவீட்டு பதிவேடு – 10000 Nos

அ.கு–

1. மன்றம் அளிக்கவும்.
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரீக்கலாம்.

தீர்மானன எண்.1131 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–13

பொது சுகாதாரம் செங்கல்பட்டு நகராட்சி தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் TN 21 AY 4146 டிராக்டரில் பேட்டரி பழுதாகி உள்ளதால் புது பேட்டரி பொறுத்துதல் பணி தமிழ்நாடு

மாவட்டம் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அவசர பணியாக மேற்கொள்ள உத்தரவு வழங்குதல் சார்ந்தது

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | பிரிடெக் பவர் லிங்க்ஸ், நெ.14/3ஏ, ஜி.எஸ்.டி ரோடு செங்கல்பட்டு– 603001 | ஜெயம் சாந்தி பேட்டரி சர்வீஸ், நெ121/ஏ–8,புது எண்–83, ஜி.எஸ்.டி ரோடு, திம்மராஜகுளம், திம்மராஜகுளம், செங்கல்பட்டு– 603001 | ஸ்ரீ சக்தி பேட்டரீஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ்,நெ.1,ஆர்.வி தெரு, ஜி.எஸ்.டி ரோடு செங்கல்பட்டு– 603001 |
| 1 | குப்பைகள் அள்ள டிராக்டர் பேட்டரி பழுதாகி உள்ளதால் புதிய பேட்டரி பொறுத்துதல் தொடர்பாக | 8950/– | 9000/– | 9100/– |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. பிரிடெக் பவர் லிங்க்ஸ் ஒப்பபந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு–

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.1132 நாள். 30.09.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–14

செங்கல்பட்டு நகராட்சி – பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவின் பேரில் போர்கால அடிப்படையில் நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கீழ் கண்டுள்ள படிவங்கள் உடனடியாக தேவைப்படுவதால் அதனை அரசு பதிவு பெற்ற உள்ளூர் அச்சகத்திலிருந்து நகல் எடுத்து பயன்படுத்தப்பட்டமைக்கு உண்டான தொகை 26,000/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. நகல் எடுக்கப்பட்ட படிவங்கள் மற்றும் எண்ணிக்கைகள்

3. KMR specimen Referal for Covid-19 (SARS-COV2) - 3000 Nos
4. டெங்கு காய்ச்சல் மஸ்தூர்கள் தினசரி பணி அளவீட்டு பதிவேடு – 10000 Nos

| வ.எண் | பொருளின் விவரம் | Qty | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|---|
| | | | **Vedagiri J Vedhaa Enterprises 1-B Gundur Church Road,Chengalpattu-603001** | **Siva Subramanium Browsing Centre,7/6,C.N Mahadevan street,Chengalpattu-603001** | **SM Consultancy,214 A, Bharathi Street, Kannapettai, Chengalpattu – 603111.** |
| | | | **Amt** | **Amt** | **Amt** |
| 1 | KMR specimen Referal for Covid – 19 (SARS-COV2) மற்றும் டெங்கு காய்ச்சல் மஸ்தூர்கள் தினசரி அளவீட்டு பதிவேடு நகல்கள் (13,000 எண்ணிக்கை) | 13,000 | 26,000 | 39,000 | 32,500 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு. வேதகிரி** ஒப்பபந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு–

1. மன்றம் அளிக்கவும்.
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

தீர்மானன எண்.1133 நாள். 30.09.2020
அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி